

மயிலாப்பூர் சட்டமன்ற_தொகுதி, 121வது வட்டம், மயிலை மேற்கு பகுதியில், வீரபெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை ஆ.இராசா எம்.பி. ஆய்வு செய்தார்.





திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள் தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி, மாநாட்டுத்திடலில் அமைக்கப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்களுக்காக இயற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகளின் புகைப்படத் தொகுப்பை மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகளுடன் திறந்து வைத்து கழக நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டனர்.

### துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் – சென்னை மாநகராட்சி சார்பில்

# ரூ. 21.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு மேற்கொண்டார்!









சென்னை, டிச.29-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (27.12.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே. சேகர்பாபு , துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூபாய் 21.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்/சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவர் , துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-57, வால் டாக்ஸ் ரோடு, வ.உ.சி. சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூபாய் 13.43 கோடி மதிப்பீட்டில் குளிர் சாதன வசதி மற்றும் வாகன நிறுத்தம் வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடம் பணியினையும் மற்றும் ரூபாய் 1.4 கோடி மதிப்பீட்டில் 4 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் வார்டு-54, அம்மன் கோயில் தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூபாய் 3.6 கோடி மதிப்பீட்டில் 10 வகுப்பறைகள் மற்றும் கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் புதிய பள்ளிக் கட்டடம் மற்றும் முதல்வர் படைப்பகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், வடமலை தெருவில் தற்போது பயன்பாட்டில் இல்லாத பல்நோக்கு மையக் கட்டடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து இதர அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கு வழங்குவது தொடர்பாக உரிய வழிகாட்டுதல்களை மாநகராட்சி அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், வார்டு-55, போர்ச்சுகீஸ் சர்ச் சாலையில், ரூபாய் 1.8 கோடி மதிப்பீட்டில் 5 வகுப்பறைகள் மற்றும் கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடத்தினையும் மற்றும் வார்டு-54, அம்மன் கோயில் தெருவில், ரூபாய் 1.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், வார்டு-59, சத்தியவாணி முத்து நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் உடற்பயிற்சி கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, உடற்பயிற்சி கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவரவும், உரிய பயிற்சி பெற்ற உடற்பயிற்சியாளர்களை நியமித்திடவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார். பின்னர், அப்பகுதியில் உள்ள பொது மக்களிடம் அடிப்படை தேவைகள் வசதிகள் குறித்து கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின்போது, வடக்கு வட்டாரத் துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி – வானகரம் ஊராட்சியில்

# மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி - காரிய மேடை கட்டிடம் - புனரமைக்கப்பட்ட குளம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! அ.ம.துரைவீரமணி அறிக்கை!

சென்னை, டிச. 29 -

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம. துரை வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வானகரம் ஊராட்சியில் ரூபாய். 1,27,45,000 கோடி மதிப்பீட்டில் ஓடமா நகரில் குளம் புனரமைத்தல், ஓடமா நகரில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, ஓடமா நகரில் காரியமேடை கட்டிடம், ஓடமா நகரில் பேவர் பிளாக் நடைபாதை மற்றும் சுற்றுச்சுழல் வானகரம் பேருந்து நிழற்குடை திறப்பு விழா இன்று (29.12.2025 - திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைக்கிறார்.

தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் டி.ராமகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ஆர்.ஞானேஸ்வரி, உதவி செயற்பொறியாளர் டி.சுப்பிரமணியன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜி.ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் எம்.பிரதாப், திட்ட இயக்குனர் வி.ஜெயக்குமார், மாவட்ட செயற்பொறியாளர் எஸ்.தணிகாசலம், ஊராட்சிச் செயலாளர் ஆர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### உதயமலர் பாண்டியன் தலைமையில் திருவள்ளூர் நகராட்சி 27 வார்டுகளில் உள்ள

# மாணவர்கள் - இளைஞர்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், டிச.29;-

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் இளைஞர்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் தாமோதரன், சுகாதார அலுவலர் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திருவள்ளூர் நகராட்சியில் உள்ள 27 வார்டு களிலும் வார்டுகள் தோறும் 2 குழுக்களுக்கு கிரிக்கெட் பேட், பந்து, கைப்பந்து, வளைக்கோல் பந்து, பூப்பந்து உள்பட விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்தி பேசினார்.

அப்போது பேசியதாவது, இந்த விழாவில் நகர மன்ற தலைவர், துணைத்தலைவர், நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதற்கு காரணம், நீங்கள் பொறுப்புடன் கட்சி பாகுபாடு இல்லாமல் விருப்பு, வெறுப்பு இல்லாமல் அனைவரையும் சமமாக நடத்தி விளையாடிய பிறகு மீண்டும் விளையாட்டு உபகரணங்களை திருப்பி கொடுக்க வேண்டும் என்பதே எனது அன்பான வேண்டுகோள்.

இதை நீங்கள் கண்டிப்பாக செய்வீர்கள், உங்களுக்கும் நன்றாக தெரியும், நீங்கள் மக்கள் பிரதிநிதி, மக்களுடைய எண்ணங்கள் உங்களுக்கு தெரியும், இங்க இருக்கக்கூடிய மக்கள் சாதாரண ஆட்கள் கிடையாது. குறிப்பாக மாணவர்கள் உடனே வாட்ஸ் அப் பேஸ்புக் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் போட்டு நான் உட்பட யார் தவறு செய்தாலும் ஆப் மூலம் சுட்டிக்காட்டி விடுவார்கள். எனவே அனைவரும் உஷாராக இருக்க வேண்டும் என்றார்

இதில் ஒன்றிய பொறுப்பாளர் டி.மோதிலால், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, பொன்பாண்டியன், நகர நிர்வாகிகள் கமலக்கண்ணன், என்.பரசுராமன், ராஜேஸ்வரிகைலாசம், டி.என்.ஆர்.சீனிவாசன், இ.குப்பன், நகராட்சி கவுன்சிலர்கள் வசந்தி வேலசுதம், நீலாவதி பன்னீர்செல்வம், கு.பிரபாகரன், பிரபு, சாந்தி கோபி, அயூப்அலி, டி.கே. பாபு, வி.இ.ஜான், ஜி.ஆர். ராஜ்குமார்தாமஸ், பத்மாவதிஸ்ரீதர், அருணாஜெய்கிருஷ்ணா, டி. செல்வகுமாரன், இந்திராபரசுராமன், வி.சீனிவாசன், ஏ.எஸ். ஹேமலதாநரேஷ், ஆர்.விஜயகுமார், கமலிமணிகண்டன், தனலட்சுமிசீனிவாசன் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர் .



திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் நகராட்சி 27 வார்டுகளில் உள்ள இளைஞர்கள், இளைஞிகள், மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 27 லட்சம் மதிப்பீட்டில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் பங்கேற்று விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் நகர மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் தாமோதரன் , நகர்மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள் அரசுத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.ராதாகிருஷ்ணன் நிகழ்ச்சி ஏற்பாடு!

# காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.காந்தி வழங்குகின்றனர்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், டிச.29

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம்- காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர்-உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 30.12.2025-செவ்வாய்க்கிழமை அன்று மாலை 3 மணிக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் திடல், வினாயகபுரம் சிறுகாவேரிப்பாக்கத்தில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.சுகுமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி. ராதாகிருஷ்ணன், மா. வினோத்குமார், ஏ.தினேஷ், அ. ஷாகுல் ஹமீது, ஜெ.ஆர். சதிஷ்குமார், ஜி.சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ் விழாவில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநிலச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. கலந்துகொண்டு நல உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

இவ் விழாவில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., வே.கௌதமன், ப.அப்துல் மாலிக், ஜெ.ராமகிருஷ்ணன், சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே. ஆறுமுகம், ச.இனியரசு, ஓ.எஸ்.தினகரன், மலர்விழி குமார், எம்.எஸ்.சுகுமார்,ஆர்.டி.அரசு, டி.ஆர். நாராயணன்,ஆர். அப்பாதுரை, ஜி.சுகுமாரன், டி. அன்பழகன், பெ.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஆர்.தசரதன்,பி.எம். பாபு, கே.திலகர்,எஸ்.சந்துரு,அ.தசரதன், சு.வெங்கடேசன், கு.குமார், பி. சேகர், கெ.ஞானசேகரன், டி.குமார், க.குமணன், ஏ.சரவணன், பி.எச்.சத்தியசாய்,ஜி.தம்பு, கே.கண்ணன், பொன்.சிவக்குமார், டி.வி. கோகுலகண்ணன், ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, வி.ஏழுமலை, கே.எஸ். ஆர். கார்த்திகேயன், என். பாண்டியன், டி.மோகன்தாஸ், ஆ.சந்தரமூர்த்தி, வி.டி.ஆர்.எழிலரசன், என். எஸ்.பாரிவள்ளல், எஸ். கே.பி. சீனிவாசன், எஸ். சிகாமணி,வே.ஏழு மலை, கே.இராஜேந்திரன், எஸ். டி.பிரேம்சந்த், எஸ். உசேன், பி.சசிகுமார், எஸ். எழிலரசி, கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன், பி. நிர்மலா, மு.சுப்பராயன், மலர்கொடி குமார், ஆர். கே.தேவேந்திரன்,நித்யா சுகுமார்,ஹேமலதா ஞானசேகரன்,சசிகலா கணேஷ், சாந்தி சீனிவாச,எஸ். மோகன்,ராஜலட்சு குஜராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர். மாவட்டப் பிரதிநிதி எஸ். ஆர். ஆர். சசிக்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் நவீன் சிவாஜி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முன்னதாக மாலை 3 மணிக்கு கலைமாமணி இசையரசு டாக்டர் இறையன்பன் குத்தூஸ் வழங்கும் கழக இசைநிகழ்ச்சி நடைபெறுகின்றது.

### புத்தாநத்தம் ஊராட்சி இரண்டாக பிரிப்பு :

# முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த மக்கள்!

## மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

திருச்சி டிச.29-

திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறை ஒன்றியத்தில் 21 கிராமங்களை உள்ளடக்கிய புத்தாநத்தம் ஊராட்சி அமைந்துள்ளது. இதனை இரண்டாகப் பிரித்து 12 கிராமங்களுடன் இடையபட்டி ஊராட்சி என்ற புதிய ஊராட்சி உருவாக்கப்பட்டுள்ளது இதில் சின்ன கவுண்டம்பட்டி கணவாய் பட்டி, குருமலைப்பட்டி, வடக்கு இடையபட்டி உள்ளிட்ட 12 கிராமங்கள் இந்த புதிய ஊராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

புத்தாநத்தம் ஊராட்சியை பிரிப்பதற்கு புத்தாநத்தம் சீரமைப்பு சங்கம் உருவாக்கப்பட்டு அதன் ஒருங்கிணைப்பாளராக புத்தாநத்தம் ஜமாத் செயலாளர் எம் கே சாகுல் ஹமீது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது அந்த குழுவில் கே எஸ் அமானுல்லா, டி ஏ கே சதக்கத்துல்லா, முகமது முபாரக், அன்வர் அலி ராஜ முகமது ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஊராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மணப்பாறை எம்எல்ஏ அப்துல் சமது, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி, திருச்சி மாவட்ட அமைச்சர்கள் கே என் நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோருக்கு வரைவு திட்டத்தை அனுப்பி கலெக்டருக்கு பரிந்துரை செய்தனர். அதன் அடிப்படையில் தற்போது அந்த ஊராட்சி இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தமிழக முதலமைச்சர் மு. க .ஸ்டாலின், அமைச்சர்கள் பெரியசாமி ,கே என் நேரு ,அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் காதர் மொகிதீன், எம்பிக்கள் ஜோதிமணி கவிஞர் சல்மா மணப்பாறை எம் எல்ஏ அப்துல் சமது ஆகியோருக்கும் புத்தாநத்தம் ஊராட்சி தலைவர் துணைத் தலைவர், புத்தாநத்தம் கஸ்பா பகுதியில் உள்ள ஆறு வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராமப்புற வார்டு உறுப்பினர்கள்,

புத்தாநத்தம் ஜமாஅத் நிர்வாகம், புத்தாநத்தம் கஸ்பா நலச்சங்கம், நூரே அஹமதிய்யா பைத்துல் மால், ஆயத்த ஆடைகள் தயாரிப்பாளர்கள் நலச்சங்கம் மற்றும் கிராம மக்களுக்கு புத்தாநத்தம் ஊராட்சி சீரமைப்பு சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

மேலும் புத்தாநத்தம் சீரமைப்பு சங்கத்தின் பொறுப்பாளர்கள் சாகுல் அமீது தலைமையில் கலெக்டர் சரவணனை சந்தித்து தங்களது நன்றியை தெரிவித்தனர்.

### நே.சிற்றரசு தலைமை! அன்பகம் கலை – தயாநிதிமாறன் எம்.பி. –

### நா.எழிலன் நாகராதன் எம்.எல்.ஏ. – வினோத் வேலாயுதம் – சைதை சாதிக் பங்கேற்பு!

# 110 (அ) வட்டத்தில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பரப்புரைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை!

சென்னை, டிச.29-

110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி, துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் 110 (அ) வட்டத்தில் இன்று (29.12.2025 - திங்கள்கிழமை) மாலை 7.00 மணி அளவில் பாகம் - 136, 142, 143, 144 ஆகிய பாகங்களில் தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்வாடி என்ற பரப்புரை காமராஜபுரம் 2வது தெரு, கிருஷ்ணன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இப்பரப்புரைக் கூட்டத்திற்கு பாகம் 136, 142, 143, 144 பாகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகி கள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, BYA மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை விடுத்துள்ளார்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பம்மல் வடக்கு பகுதியில் பாகம் 24 ல் பாகம் செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் தெருமுனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டங்களில் கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ் மாறன், மாமன்ற உறுப்பினர் வாணி ஸ்ரீ.விஜயகுமார், வட்ட கழக செயலாளர் மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.